| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திரு. ராதா<br>த.பெ. திரு. கலியன் | அ.வ.எண்.234/2015 | 10.09.2025 |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

12) தாவா 2 வது அயிட்ட சொத்தின் கிழமேல், தென்வடல் அளவுகளை எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் முன்னதாக அளந்ததை வைத்து குறிப்பிட்டுள்ளேன். எந்த ஆண்டு அளந்தேன் என்றாலும், சர்வேயர் வைத்து அளந்தேன் என்றாலும் சர்வேயர் ஆதியில் அளந்து கொடுத்தார், எந்த ஆண்டு என்று நியாபகம் இல்லை. எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 1 வது அட்டவணை 2 அயிட்ட சொத்தில் அரசு தொகுப்பு வீடு கட்டி கொடுத்தாக கூறியுள்ளேன், எந்த வருடம் என்றால் நியாபகம் இல்லை.

13) உள்ளூர் பஞ்சாயத்து மூலம் மேற்படி தொகுப்புவீடு கட்டிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். கட்டுமான அளவுகள் குறித்து பஞ்சாயத்து வரைபடம் கொடுத்தார்களா என்றால் நியாபகம் இல்லை. தாவா 2 வது அட்டவணை சொத்தை நானும், ஊர் பொதுமக்களும் பாதையாக 100 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வருவதாக கூறுகிறேன் என்றால் ஆமாம்.

14) நான் 100 ஆண்டுகளுக்கு மேலாக 2 வது அட்டவணை சொத்தை பாதையாக பயன்படுத்தி வருவதாக கூறியுள்ளேன், 1927, 1957, 1987 ஆகிய காலக்கட்டங்களில் ஏற்பட்ட புல வரைபடங்களில் 2 வது அட்டவணை சொத்து பாதையாக கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. தாவா 1 வது அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு 2 வது அட்டவணை பாதையை தவிர வேறு பாதை இல்லை என்பது தான் எனது கட்சி

10.09.2025

என்றால் ஆமாம்.

15) வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது தாவா 1வது அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு 2வது அட்டவணை பாதையை தவிர வேறு பாதை இல்லை என்பதை காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். நீதிமன்ற ஆணையரின் இறுதி அறிக்கை மற்றும் வரைபடத்தில் நான் சொல்வது போல் வேறு பாதை இல்லை என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

16) தாவா 2வது அயிட்ட சொத்தில் மின்கம்பம் உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான், அதில் மின்விளக்கம் எரிகிறது. நீ.சா.ஆ.4 வரைபடத்தில் புல எண்.53/73ல் வடபுற எல்கையில் மின் விளக்கு உள்ளதாகவே காட்டப்பட்டுள்ளது என்றாலும், புல எண்.53/61 ற்குள் இல்லை என்றாலும், எனது வீட்டின் வாசற்படிக்கு எதிரே உள்ளது. தாவா 2வது அட்டவணை சொத்து 25 நபர்களுக்கு பாத்தியப்பட்டதாக கூறியுள்ளேன், அதில் என்னுடைய பெயர் உள்ளதா என்றால் எனது தந்தை பெயரும், தாத்தா பெயரும் உள்ளது.

17) தாவா 2வது அட்டவணை சொத்தான புல எண்.53/61க்குள் தென்புற ஓரத்தில் கிழமேலாக 1ம் பிரதிவாதி சிமெண்ட் தூண் ஊன்றி கம்பி வேலி கட்டியிருந்தார் என்றால் சரிதான். அதை நான் என்ன செய்தேன் என்றால் வழக்கு நடப்பதால் அதனை எடுத்து அகற்றிவிட்டேன். அவ்வாறு அகற்றுவதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை, 1ம் பிரதிவாதி அனுமதியில்லாமல் வழக்கு நடக்கும் போது வேலி கட்டியதால் நான் அகற்றினேன்.

10.09.2025

18) 1,2 பிரதிவாதிகள் அரசாங்கத்தில் வீடு கட்ட அனுமதி பெற்றுள்ளதாகவும், அதை உரிய ஆவணங்களை காட்டி மேற்படி திட்டத்தை ரத்து செய்ய வைத்துவிட்டேன் என்றால் சரிதான். என்ன ஆவணத்தை காண்பித்து திட்டத்தை ரத்து செய்தேன் என்றால் கூட்டுப்பட்டாவை காட்டினேன். 1,2 பிரதிவாதிகள் பெயருக்கு புல எண்.53/61 ற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், வழக்கிற்கு பின்னிட்டு வழங்கப்பட்டுள்ளது.

19) மேற்படி பட்டாவை எதிர்த்து நான் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் நீதிபேராணை மனு எண்.4550/2023 யை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நாளது வரை 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டதா அல்லது நிலுவையில் உள்ளதா என்றால் தெரியாது, ஆனால் அதை பொறுத்து மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் தடை உத்தரவு பெற்றுள்ளேன்.

20) பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து தெரிந்துகொண்டேனா என்றால் நியாபகம் இல்லை. புலஎண்.53/61 ன் ஒரு பகுதி ஆதியில் எல்லப்பமுதலியார் என்பவருக்கு பாத்தியம் என்றால் இல்லை. அதனை 27.03.1961 தேதியில் எல்லப்பமுதலியாரிடமிருந்து சங்கிலி மூப்பன், மருதை மூப்பன், கருப்பன் மூப்பன் ஆகியோர் கிரையம் பெற்றுவிட்டனர் என்றால் சரியல்ல.

21) 1ம் பிரதிவாதி ராஜேந்திரனின் மனைவி பாப்பாத்தி என்பவர் மேற்படி சங்கிலி மூப்பனின் மகள் என்றால் சரிதான். 27.03.1961 தேதிய கிரைய ஆவணத்தின் அடிப்படையிலேயே 1ம் பிரதிவாதியும், அவரது

குடும்பத்தாரும் 2வது அட்டவணை சொத்தில் உரிமையிலும், பாத்தியத்திலும் உள்ளனர் என்றால் சரியல்ல.

மேற்படி கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தின் ஒரு பகுதியையே தாவா 2வது அட்டவணை சொத்தாக பாதையாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நீ.சா.ஆ.1,2 அறிக்கை வரைபடத்தில் கண்ட மேற்படி ஆய்வை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் இன்றி நீதிமன்ற ஆணையர் மேற்கொண்டதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

22) நீ.சா.ஆ.2 வரைபடமானது நான் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தை ஒத்தே ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. நீ.சா.ஆ.3,4 அறிக்கை வரைபடத்தில் கண்ட மேற்படி ஆய்வை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் மேற்கொண்டதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றால் சரியல்ல. நீ.சா.ஆ.3,4 ன் படி பார்த்தால் தாவா 2வது அட்டவணை சொத்து பாதை அல்ல என்பது புலப்படும் என்றால் சரியல்ல.

23) நீதிமன்ற ஆணையரின் இறுதிநிலை அறிக்கையில் புல எண்.53/72 முதல் 53/75 வரை மேற்படி நான்கு புல எண்களுக்குள் உட்பட்டு அதன் வடபுறமாக 3 அடி பாதை உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றாலும், புல எண்.53/61 ல் பாதை உள்ளதாக காட்டப்படவில்லை என்றாலும் சரியல்ல. எனது புல எண்ணில் உள்ள மேற்படி பாதையை தான் நாங்கள் காலம் காலமாக பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

24) புல எண்.53/61 ல் எந்த காலத்திலும் பாதை போன்ற அமைப்பு இல்லை என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளின் அடிப்படையில்

**இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.**

10.09.2025